முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நொண்டிச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

27.09.2018, வியாழக்கிழமை

1. **மனுகுலத்தையே மாய சிக்கலிலிருந்து**
**மாற்றவே மீட்கவே அவதரித்த**
**ஞானபண்டிதன் சக்தியாக வந்த**
**ஞானியே ஆறுமுக அரங்கனே**

2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் ஒளி சூட்சும நூலை
வரங்களென **விளம்பி தரிவை திங்கள்**
**வகைபட லாபதிகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 11ம் நாள் 27.09.2018, வியாழக்கிழமை)**

3. வாரமதில் நொண்டிச்சித்தர் யானும்
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
வாராந்திர தரிசனம் தன்னை
வணங்கி வந்து மக்கள் தொடர

4. தொடரவே மக்களுக்குப் பாதுகாப்பு
தொடரும் ஆறுமுகன் ஆளுமை
இடரில்லா ஞானஆட்சி அமைய
ஏழாம் படை வீட்டு அரங்கன் தலைமை

5. தலைமை ஏற்று வருகவே
தலைவன் ஞானபண்டிதனை
நாளும் மக்கள் வணங்கி வர
ஞானிகள் ஆளுமை உதயமாகும்

6. ஆகவே மக்கள் எல்லாம்
அரங்கப் பெருமான் தருமத்தை
யுகமக்கள் நலம்காண வேண்டி
உலகமெங்கும் செய்து வர

7. வருகவே எதிர்மறை எண்ணம்
வக்ர கொடூர செயல்கள் அணுகா
முருகப்பெருமான் அருளால்
முழுமையான ஞானபலம் அடைந்து

8. அடைந்துமே கலிகால மக்கள்
ஆபத்தில்லா வாழ்வு வளமும்
சோடை போகா பொருள் வளமும்
சுபிட்சமான வாழ்வும் அடைவர்

9. அடைவரே அரங்கன் பெருமை
அறிய உணர கலியுகத்தில்
இடரில்லா நற்குண நலமுடன்
ஏற்றமான சிந்தை தெளிவு கண்டும்

10. கண்டுமே கலிமாயைகளை வென்று
கந்தவேலனால் காக்கப்படுவர்
தொண்டென அரங்கன் தரும
தொண்டு வழி மக்கள் இணைய

11. இணையவே ஈடு இணையில்லா
எங்கள் தவசி மூலம் சித்தி கண்டு
இணைந்திடுவர் ஞானயுகத்தில்
இயம்பிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் நொண்டிச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

மனுச்சக்கரவர்த்திக்கு பின் தோன்றிய இக்கால மானுட வர்க்கத்தையே கலியுகத்தின் மாமாயையின் பிடியிலிருந்து மீட்டு இந்த கலியுகத்தையே ஞானயுகமாக மாற்றிடவே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக வந்துதித்திட்ட மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 11ம் நாள் 27.09.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே நொண்டிச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நொண்டிச்சித்தர்.

ஒவ்வொரு வாரமும் குருநாளாகிய வியாழக்கிழமையான இன்றைய தினமதனிலே உலகோர் ஞானகுரு ஆறுமுக அரங்கனை வாராந்திர தரிசனமாக ஏழாம் படை வீடு வந்து வணங்கி வரவர, அவர்களுக்கு சர்வபாதுகாப்பும் உண்டாகி முருகப்பெருமானின் ஆட்சி இவ்வுலகினில் தடையின்றி அமைந்திடவும் உதவுமப்பா.

இவ்வுலகினில் முருகப்பெருமானின் ஆட்சி தடையின்றி அமைந்திட ஏழாம் படை வீடு நாயகன் ஆறுமுக அரங்கனும் உலகினில் தலைமையேற்று உலகப் பெருமாற்றத்தை நிகழ்த்தி வருகின்றார். ஆதலினால் ஞானஆட்சிக்கு வருகின்ற ஞானத்தலைவன் முருகப்பெருமானை நாளும் நாளும் மக்கள் பயபக்தியுடன் வணங்கி வரவர, ஞானிகளின் ஆட்சி உலகினில் விரைந்து உருவாகிடும்.

ஆதலினால் மக்களெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் ஆற்றும் தருமத்தினை இந்த உலக மக்கள் நலம் பெற வேண்டியே உலகமெலாம் செய்து வர, உலகினில் உள்ள எதிர்மறையான எண்ணங்கள் விலகும், வக்கிரமான எண்ணங்கள் கொடூரமான செயல்கள் எல்லாம் மக்களை அணுகாது காக்கப்படும். மக்கள் முருகப்பெருமான் அருளாசியினால் முழுமையான ஞானபலத்தை அடைந்து சிறப்படைவார்கள்.

உலக மக்களெல்லாம் அரங்கன் அருளால் ஞானபலத்தினை அடைந்து ஆபத்துகள் ஏதும் இல்லாத வாழ்வினையும், வளமான வாழ்வினையும் வீண் போகாத பொருள் வளமும் சுபிட்சமான வாழ்வினையும் காண்பார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பெருமைகளை அறிந்திடவும், உணர்ந்திடவும் உள்ள வாய்ப்பை அடைந்திட அவரெல்லாம் இக்கலியுகத்திலும் இடர்கள் ஏதும் இல்லாத நற்குண நலமுடன் உயர்வான சிந்தையும் தெளிவான அறிவையும் உடையவர்களாக ஆகி சிறப்படைவார்கள்.

அவரெல்லாம் தெளிந்த அறிவும் உயர் சிந்தையும் பெற்று கலியுக மாயைகளை வென்று முருகப்பெருமானால் காக்கப்படுவார்கள். உலகோர் கடைத்தேறிட அரங்கன் அருளும் தானதரும சேவைகளில் தொண்டுகள் செய்திடவே தொண்டின் மூலம் மக்களெல்லாம் ஒன்றிணைந்திட ஈடுஇணையற்ற ஞான தவசி எங்கள் ஆறுமுக அரங்கமகா தேசிகன் மூலம் சித்திகளை அடைந்து ஞானயுகத்தினில் இணைந்திடுவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் நொண்டிச்சித்தர்.

–சுபம்–